போர்வாள்

...திராவிடர் வார வெளியீடு...

வாள் 1 | திருவள்ளுவர் ஆண்டு 1979 பங்குனி 7 | 20-3-48 சனிக்கிழமை | வீச்சு 31

ஆசிரியர்கள்:



தொண்டுக்கேற்ற பரிசு.....!

உரையாடல்:

சிக்கலான பிரச்சினை!

[சித்திரபுத்திரன்]

பகுத்தறிவு வாதி:- மதங்கள் யாரால் உண்டாக்கப்பட்டவை?

ஆஸ்திகன்:-மதங்கள் கடவுளால் உண்டாக்கப்பட்டவை.

பகுத்தறிவு வாதி:- அல்ல-அவை மனிதர்களால் உண்டாகியவை.

ஆ-ன்:- ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?

ப-தி:- மதங்கள் எத்தனை உண்டு?

ஆ-ன்:- பல மதங்கள் உண்டு.

ப-தி:- உதாரணமாகச் சில சொல்லும்.

ஆ-ன்:- எடுத்துக் காட்டாக, இந்து மதம், புத்த மதம், கிறிஸ்து மதம், மூகமதுமதம், சீக்மதம், பார்சி மதம், ஜௌராஷ்ட்டிர மதம், முதலியவைகளும் இவற்றுள் பல உட்பிரிவுகளும் உண்டு.

ப-தி:-கடவுள்கள் எத்தனை உண்டு?

ஆ-ன்:-ஒரே கடவுள் தான் உண்டு

ப-தி:- இவ்வளவு மதங்களும் யாருக்காக உண்டாக்கப்பட்டவை?

ஆ-ன்:-மனித வர்க்கத்துக்காகத் தான்.

ப-தி மதத்தால் ஏற்படும் பயன் என்ன?

ஆ-ன்:-மனிதன், கடவுளை அறியவும் கடவுளுக்கும், தனக்கும் சம்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளவும், ஆத்ம ஞானம் பெறவும், கடவுள் கருணைக்குப்பாத்திரனாகவும், பயன்படுவதாகும்.

ப-தி:- அப்படியானால் ஒரே கடவுள் மனித வர்க்கத்துக்கு இத்தனை மதங்களை ஏற்படுத்துவானேன்?

ஆ-ன்:-இது மிகவும் சிக்கலான பிரச்சினையாய் இருக்கிறது. பல பெரியார்களைக் கண்டு பேசிய பிறகு பதில் சொல்லுகிறேன்.

இந்து மதம்.

ப-தி:- அதுதான் போகட்டும், இந்து மதம் என்பது என்ன?

ஆ-ன்:- ஹிந்து மதம் என்றால் வேதமதம் என்று பெயர்.

ப-தி:- வேதம் என்றால் என்ன?

ஆ-ன்:-ருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என 4 வேதம் உண்டு. அவ் வேத முறைதான் இந்து மதம் என்பது.

ப-தி:-இவ்வேதங்கள் யாரால் ஏற்படுத்தப்பட்டவை?

ஆ-ன்:- வேதம் கடவுளால் ஏற்படுத்தப்பட்டது.

ப-தி: வேதம் கடவுளால் ஏற்படுத்தப்பட்டது என்று யார் சொன்னார்கள்?

ஆன்:- வேதம் கடவுளால் ஏற்படுத்தப்பட்டது என்று வேதம் சொல்கிறது.

ப-தி:- இதற்கு ஏதாவது சாட்சியோ ஆதாரமோ உண்டா?

ஆ-ன்:- வேதத்துக்கும், கடவுள் வாக்குக்கும் ஆதாரமோ, சாட்சியோ கேட்பது என்றால் அது பாவமான காரியமேயாகும்.

ப-தி:- அது பாவமாக இருக்கலாம். ஆனால் ஆதாரம் ருஜு இல்லாமல் ஒன்றை ஒருவன் நம்புவது என்றால் அது குற்றமாகாதா?

ஆ-ன்:- இதுவும் கஷ்டமான பிரச்சினையாகத்தான் இருக்கிறது. பெரியவர்களைக் கேட்டுப் பார்க்க வேண்டும்.

புத்த மதம்

ப-தி:-சரி புத்த மதம் என்றால் என்ன?

ஆ-ன்:- புத்தமதம் என்பது புத்தர் என்கிறவருடைய கொள்கை.

ப-தி:- அது யாரால் ஏற்பட்டது?

ஆ-ன்:-புத்தர் என்கிறவர் காலத்தில் ஏற்பட்டது.

ப-தி:- அதற்கு என்ன ஆதாரம்?

ஆ-ன்:- புத்தர் என்கிறவர் சொன்னதாகச் சொல்லப்படும் வாக்குகள் தான்:

ப-தி:-புத்தர்தான் சொன்னார் என்பதற்கு ஆதாரம் என்ன?

ஆ-ன்:-புத்தர் சங்கதி சரித்திரத்தில் பட்டதாய் இருக்கிறது. அன்றியும் அதில் இன்றைய... யில் மற்ற மதங்களைப் ே... கடவுள், கடவுள் வாக்கு, பல... புதங்கள் முதலியவை இ... என்பதோடு ஆலோசனைக்... அறிவுக்கும் பொருத்தமான... எடுத்துக் கொண்டு, மற்ற... ளைத் தள்ளிவிடுவதில் பாவ... குற்றமோ, கடவுள் தண்டனை... இல்லை. ஆகையால் அதற்கு ... ரம் தேடிக்கொண்டிருக்க வே... டிய அவசியமில்லை.

ப-தி:- சரி ரொம்ப நல்லம... சமாதானம் சொன்னீர்கள். ... படியானால் அம் மதத்தைப் ப... நமக்குக் கவலை இல்லை.

கிறிஸ்து மதம்

ப-தி:- கிறிஸ்து மதம் என... என்ன?

ஆ-ன்:-கிறிஸ்தவ மதம் ... பது கிருஸ்துவால் சொல்லப்... கொள்கை

ப-தி:- அது எது?

ஆ-ன்:- பைபிள்.

ப-தி:- கிறிஸ்து என்ப... யார்?

ஆ-ன்:- கிறிஸ்து க... குமாரர்.

ப-தி: அப்படி என்று ... சொன்னார்?

ஆ-ன்:-கிறிஸ்து சொல்லி... கிறார்-

ப-தி:- ஒருவர் தன்னை இ... என்று ரூபிக்க அவரது ... மூலமே போதுமா?

ஆ-ன்:- ஏன் போதாது?

ப-தி:- அப்படியானால் ... போது ஒருவன் வந்து உம்... தான் தான் கடவுள் ... சொன்னால் ஒப்புக்கொள்வீர...

ஆ-ன்:- இதுவும் கஷ்ட... பிரச்சினைதான், பெரியவர்... கேட்கவேண்டும்.

முகம்மதிய மதம்.

ப-தி:- முகம்மதியமதம் என்ன?

(9-ம் பக்காம் பார்க்க

ஓம் நமசிவாயா பாங்க்!

"உங்கள் இந்தியாவில், மதம் மிக மிக அதிகமான அளவுக்கு, காணப்படுகிறது. இந்தியா அதை எவ்வளவோ குறைத்துக் கொள்ள முடியும். உங்களுடைய தேசிய கலாச்சாரத்தில் மதம் ஒரு முக்கியமான பகுதி என்பது எனக்குத்தெரியும். ரிக்வேத காலத்திலிருந்தும் புத்தர் காலத்திலிருந்தும், காந்தியாரின் தத்துவங்களும் நம்பிக்கைகளும் பரவிய இந்தக் காலம் வரை இந்திய மண்ணில் இடைவிடாது பாய்ந்துவரும் ஒரு நீரோட்டம் மதம் என்பதையும் நான் நன்கறிவேன். இந்தியாவைத் தவிர வேறு எந்த நாடும் நவீன கால ரிஷி ஒருவரைத் தோற்றுவித்திருக்க முடியாது என்பதும், இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டுக்கும் மதக் கட்டளைகளை அரசியல் மேடையில் நடமாட விடும் நெஞ்சுத் தைரியமோ துணிச்சலோ இருக்காது என்பதும் நான் அறிந்தவையே. உங்களுடைய இந்தக் குணங்களை யெல்லாம் நான் பாராட்டுகிறேன். ஆனாலும் சொல்கிறேன், இந்தியாவில், மதம், அளவுக்குமீறி தாண்டவமாடுகிறது. ஆத்மார்த்த தத்துவத்தில் பல "டோஸ்கள்" அதிகமாகச் சாப்பிட்டுவிட்ட காரணத்தால் இந்தியா மூச்சுத் திணறுகிறது. கொஞ்ச காலத்திற்காவது இந்தியாவில் ஒரே ஒரு மதம் தான் இருக்க வேண்டும்—விடுதலை வேட்கை என்பதே அந்த மதம்"

—சீனப் பேரறிஞர் **லின்-யூ-டாங்** 944-ல் இந்தியாவுக்கு வந்தபோது றிய அறிவுரை இது. டாக்டர் ன்—யூ—டாங் இந்தியாவில் ஒரே ரு வாரம் தான் தங்கினார். அந்த ரு வாரத்தில் கூட மூன்று நாட் ளை ஆஸ்பத்திரியில் நோயாளி ாய்க் கிடந்து கழித்தார். மிச்சம் ருந்த நாலே நாட்களில் அவர் ந்தியா முழுவதும் சுற்றுப் பய ணம் செய்ய முடியவில்லை. நாட் ப் புறங்களையும் நகர மக்களையும் ாணவோ, அவர்களுடைய அன் ட வாழ்க்கை பற்றிய தகவல் தரிந்து கொள்ளவோ அவருக்கு நரம் இருக்க வில்லை. ஊராள்வோ ரைக்கண்டு பேசவோ, ஞானிகளை ும்யோகிகளையும் சந்திக்கவோ, லக்கியப் புலவர்களுடனும் அரசி ல் தலைவர்களுடனும் கலந்துபழக வா, சினிமாநட்சத்திரங்களுடனும் ாடக மணிகளுடனும் கை குலுக் வோ, அவருக்கு ஓய்வு கிடை ாது. நாலே நாட்கள் தான் இந்தி ாவைக் காண்பதற்கு என்று அவ ால் ஒதுக்க முடிந்தது. ஆனால் அந்த நாலே நாட்களில் அவர் உண்மை இந்தியாவைக் கண்டு விட்டார். இந்தியாவின் குறைபாட்டைக் கண்டு விட்டார். தலைமுறை தலைமுறையாக இந்தியாவில் தொடர்ந்துவந்து இந்தியத் துணைக் கண்டத்தில் உலவும் மக்கள் வாழ்க்கையைச் சிதைத்துச் சீரழிக்கும் பொல்லாத வியாதியைக் கண்டுவிட்டார். நோயைமட்டுமல்ல நோய் தீர்க்கும் வகையையும் முறையையும் கூட தெரிவித்து விட்டார்.

அவர் குறிப்பிட்ட அந்த நோய் எல்லா நோய்களையும் விட மிகப் பயங்கரமானது.

அது காலராவை விட ஏராளமான உயிர்களைத் தன் பசிக்கு இரையாக்கிக் கொள்ளும் தன்மை வாய்ந்தது.

அது எலும்புருக்கி நோயைவிட மிக விரைவில் இந்திய மக்களின் உடல் வன்மையை உறுஞ்சும் கொடுமை நிறைந்தது.

அது காச நோயை விடப் பலம் பொருந்தியது; தொழு நோயினை விட ஆபத்து நிறைந்தது; கொடுமையான ஆஸ்த்மாவை விடக் கொடுமையானது.

பெரியம்மை மக்கள் உருவைச் சிதைக்கும்; முகத்தின் அழகைக் குலைக்கும்; உடல் கட்டின் திண்மையை உலுக்கும்; உறுப்புகளின் வன்மையை அழிக்கும். ஆனால் நாம் குறிப்பிடும் நோயோ உடலை மட்டுமல்ல உள்ளத்தையே சிதைக்கும். எண்ணங்களையே அழிக்கும். சிறந்த சிந்தனைகளையும் குலுக்கும். பரந்த மனோபாவத்தையும் தொலைக்கும்.

ப்ளேக், அது பரவும் இடத்தில் எல்லாம் பலிபீடங்களை திடீர் திடீரென உருவாக்கும். டாக்டர் லின் யூ டாங் குறிப்பிட்ட நோய், அது பரவாத இடத்திலெல்லாம் கூட பலிபீடங்களை உருவாக்கும்.

அந்த நோயின் பரவுதலால் ஏற்பட்ட கஷ்டமும் நஷ்டமும் திடீர் வெள்ளங்களால் விளைந்த தீமையினும் அதிகம்; சுழன்று சுழன்றடிக்கும் சூருவளிக் காற்றினல் நேர்ந்த கொடுமையினும் அதிகம்; உயிரைக் குடிக்கும் பஞ்சங்கள் நாட்டில் நடமாடவிட்ட வேதனையினும் அதிகம்.

அந்த நோய் தலைமுறை தலைமுறையாக வருவது; பரம்பரை பரம்பரையாக நம்மைப் பிடிப்பது; நம் முன்னோர்களிடம் வாழையடி வாழையென வளர்ந்து வந்து நம்மிடமும் தாவிக் குதித்திருப்பது.

அந்த நோய் ஒருவரைப் பிடித்தால் அது விரைவில் போவதில்லை. எத்தகைய ரசாயன மருந்துகளும் அந்த நோய்வாய்ப்பட்டவர்களை முற்றிலும் குணப்படுத்திவிடுவதும் இல்லை. ஆயுர் வேதமாயினும் சரி, சித்தர் முறையாயினும் சரி, யூனானியாயினும் சரி, ஆங்கில முறையாயினும் சரியே, எந்த மருத்துவ முறைக்கும் அந்தநோய் எளிதில் அசைந்து கொடுப்பதில்லை.

நம்முடைய வாழ்க்கையை நாளும் நாளும் செல்லரிக்கும் சமுதாயக் கொடுமைகளின் முதற் காரணம் அது. ஆயிரம் உண்டிங்கு சாதி என்னும் அவல நிலையை—வர்ணாஸ்ரமத்தை—மனு தர்மத்தை, நாட்டில் நிலை நாட்டியதும் அது.

தீண்டாமை, உடன் உண்ணாமை, பாராமை, நெருங்காமை, காணாமை முதலான நோய்களுக்கெல்லாம்

பிறப்பிடம் அந் நோய். நம்முடைய தாழ்வுக்கெல்லாம் தோற்றுவாய் அந் நோய்.

அது பரவாத இடமில்லை. அந்த நோய்க்கு ஆளாகாத மக்கள் இல்லை. அதன் சர்வ வல்லமை பொருந்திய அழிவுச் சக்திக்கு முன் தலைகுனியாத சிரங்கள் இல்லை. அதைக் கையெடுத்துப் போற்றிப் புகழ்ந்து வணங்கிடாத கரங்கள் இல்லை.

அது நம்மைக் கொன்று கொண்டிருக்கிறது. நம் இதயத்தை அரித்துத் தின்றுகொண்டிருக்கிறது, நம் ஈரலை மென்று விழுங்கிக் கொண்டிருக்கிறது. ஆனாலும் நாம் கவலையின்றி, அச்சமின்றி, ஏது நேருமோ. என்ன ஆகுமோ என்ற அவலம் அணுவும் இன்றி ஆநந்தப் பள்ளு பாடிக்கொண்டிருக்கிறோம்.

டாக்டர் லின்-யூ-டாங் ஆத்மார்த்த 'டோஸ்'களை அளவுக்கு மீறி நாம் உட்கொண்டுவிட்டோம் என்று சொன்னார். உண்மை அதுவல்ல. நாம் மிக மிகப் பயங்கரமான எலும்புருக்கி நோயின் கச்சுப்பிடியில் சிக்கிக்கொண்டிருக்கிறோம். சிக்கிக்கொண்டிருப்பது கூட அவ்வளவு பயங்கரமானதல்ல; சிக்கிக்கொண்டிருக்கிறோம் என்பதை உணராமலே இருக்கிறோம்; உணர்ந்த ஒரு சிலரும் அதற்குத் தக்க 'மாற்று' தேடாமல் இருக்கிறோம். அலட்சியம் அறியாமை இரண்டும் கலந்த இந்தப் பொல்லாத போக்கின் விளைவு தான் "கல்கத்தா கொடுமை;" நவாகலி அட்டூழியம்; பீகார் சாவு; டெல்லி பிணக்கு; வடநாட்டில் மாகாணத்துக்கு மாகாணம், ஜில்லாவுக்கு ஜில்லா, ஊருக்கு ஊர் ஏற்பட்டுவிட்ட இந்து—முஸ்லிம் சாவுக்கிடங்குகளின் தோற்றம்; காந்தியார் மரணம், கோட்சேக்களின் உலா, ராஷ்டீரிய சங்கங்களின் எழுச்சி அத்தனையும்!

மதம், நம் வாழ்க்கையின் எந்தப் பகுதியை விட்டு வைத்திருக்கிறது? அரசியல் மேடையிலிருந்து வணிக மன்றம் வரை, இலக்கிய அரங்கிலிருந்து சினிமாக் கொட்டகை வரை, கல்லூரி மண்டபத்திலிருந்து சட்ட சபை படிக்கட்டு வரை, உண்ணும் உணவிலிருந்து உடுக்கும் உடை வரை, மதம், தன் ஆட்சி எனும் கூடாரம் போட்டுவிடாத இடம் ஒன்றேனும் உண்டா?

நம் மக்களுக்கு இடும் பெயரில், அந்தப் பெயரைச் சூட்டும் முறையில், அந்த முறையைக் கொண்டாடும் வகையில், நாம் அணியும் நகையில், உடுக்கும் துணியில், அதன் ஓரத்தில் ஒய்யாரமாகத் தடவும் மஞ்சள் குறிப்பில், அந்த மஞ்சளுக்குத் தரும் சிறப்பில் எதில் தான் மதம் இல்லை?

நம் கடைகளின் ட்ரேட் மார்க் முதற்கொண்டு தலையில் அணியும் தொப்பி வரையில் ஒவ்வொன்றிலும் மதம்தானே தன் வெப்ப அலைகளை வீசுகிறது?

இந்தியர்களின் வாழ்க்கையில் மட்டுமா, அவர்கள் முகத்திலேயே மதம் இருக்குமே! (நெற்றிக் குறிகள்!) அவர்கள் பருகும் தேனீரிலேயே மதம் இருக்குமே! (முஸ்லிம் சாயா—ஹிந்து சாயா!) அவர்களுடைய பெண் இனம் கூந்தலை வாரி முடிப்பதிலே, சேலையை அணியும் முறைதனிலே, நெற்றியில் தீட்டும் குங்குமத்திலே, மதம், மோகனப் புன்னகை புரியுமே! இந்தப் புன்னகையில் மயங்கி மயங்கித்தான் இந்தியா முன்னேற வேண்டிய சந்தர்ப்பங்களில்கூட மயங்கிவிட்டது.

இந்த மதச் சின்னங்களுக்கும் முறைகளுக்கும் எண்ணங்களுக்கும் ஏற்பாடுகளுக்கும் தத்துவங்களுக்கும் ஓர் அளவு உண்டு. ஒரு வரையறை உண்டு. ஒரு குறிப்பிட்ட இடம் உண்டு. அந்த அளவில் அது நிற்கும்போது அதை யாரும் குறைகூற முடியாது. ஓரளவுக்குப் பாராட்டவும் செய்யலாம். ஆனால் இந்தியாவைப் பொறுத்த வரையில், அந்த எல்லைக் கோட்டை, மதம், பலப்பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே கடந்துவிட்டது. கடந்து, வெகு தூரம் சென்றுவிட்டது.

சென்றுவிட்டது! ஆகவேதான் இந்தியா தாழ்ந்துவிட்டது.

மதம், அது இருக்கவேண்டிய எல்லையையும் தாண்டி வாழ்க்கை வயல் முழுவதும் தன் நச்சு நீரைப் பாய்ச்சுவது என்று தொடங்கிற்று. அதற்கு வாய்க்கால் வெட்டிவிடும் வேலையைத் தொடங்கினர் சில வேத வேதாந்திகள். விளைவு, பார்க்கின்றோம் நம் கண் முன்னே, மதவெறியின் கோரத் தாண்டவம்! நாதுராம் விநாயக் கோட்சேக்களின் குதூகல ஆர்ப்பரிப்பு!

நாம் கோட்சேக்களைக் கண்டால் கொதித்தெழுகிறோம். நா... ராம்கள் இந்த விஞ்ஞான கால... திலும் உலவுவதா என்று கேட்... றோம். கூடாது இந்தக் கூத்... என்று முழங்கவும் செய்கிறோ... ஆனால் கோட்சேக்களின் கொடு... செயலைக் காணும் நேரத்தி... கோட்சேக்களை உற்பத்தி செ... யும் சூழ் நிலையை நாம் மறந்... விடுகிறோம்.

அந்த சிந்தனைச் சிற்பி பெரிய... இராமசாமி கூறுவதுபோ... கோட்சே ஒரு துப்பாக்கி! அந்... துப்பாக்கி அல்ல முக்கியம், அ... ஏந்தும் கரம், அந்தக் கரத்தை... செலுத்தும் மனம் முக்கியம்... கரம்—மதம்! கரத்தைச் செலு... தும் மனம்—பழமைப் பித்து!

பன்னெடுங் காலமாக நம ம... கள் உள்ளத்தில் ஊட்டி வளர்... கப்படும் மதம், அந்த மதத்திற்... எருவும் தழையும் இட்டு அது வள... வழியும் வகையும் செய்து தரு... சமுதாயக் கட்டுப்பாடுகள், அவ... றைத் தழுவியும் பிணைந்தும் வ... ரும் வர்ணாசிரம சாதிச் சழக்... கள், அந்த சழக்குகளை மேலு... மேலும் உற்பத்தி செய்யு... வைதீக டைனமோக்கள், அ... டைனமோக்களையே தயாரிக்கு... வேத புராண இதிகாச மனுதர்ம... எனும் மின்சார நிலையங்கள்... இவை அத்தனையும் ஒன்றுட... ஒன்று பிணைக்கப்பட்டிருப்பதை... இரும்புச் சங்கிலி போல! ஒன்... லிருந்து ஒன்று பிறந்ததை தாயு... சேயும் போல! இவை அத்த... யும் சேர்ந்த "கூட்டு மொத்தம்... இருக்கிறதே, அதுதான் இந்தி... வின் வளர்ச்சியைக் குலைக்கு... பெரு நோய்.

மதம் என்பது மதம் என்... பொருட்டல்ல. மதம் என்... சொல்லுக்கே பொருள் வெ... என்பது. அந்த வெறி, இந்தி... வில் அளவுக்கு மீறி வளர்ந்துவி... டது. இந்து முஸ்லிம் சீக்கிய... எனும் பல்வேறு மதத்தினரிடமு... இந்த வெறி வளர்ந்துவிட்ட... எவரும், எந்த மதத்தினரு... இதற்கு விலக்கில்லை.

மதவெறி, மதப்பித்தம், ம... மாயை இந்தியாவில் எவ்வளவு... வளர்ந்து விட்டது என்பதற்கு ... எடுத்துக்காட்டு ஓம் நாசிவா... பாங்க்!

பாங்க் (Bank) என்பது சாதா
ணமாக ஒரு சேமிப்பு நிலையம்.
க்கள் தம் செலவு போக மிஞ்
ய பணத்தை பத்திரமாக வைத்
ருக்க ஏற்பட்ட ஓர் அமைப்பு.
ங்க், மற்றவர் பணத்தைச்
சர்த்து வைப்பது மட்டுமல்லாமல்
றருக்கு கடனும் கொடுக்கிறது.
து சேமிப்பு நிலையமாக மட்டும்
ாமல் லேவாதேவி மன்றமாக
ம் இருக்கிறது. சுருங்கச் சொன்
ல் "கொடுக்கல் வாங்கல்" அதன்
தொழில்—கடன் கொடுத்தல்,
டன் வாங்கல்! சில பாங்குகள்
தொழில் துறை நுணுக்கத்தில் இன்
ம் பல மடங்கு வளர்ந்திருக்கின்
ன. ஆனால் பல பாங்குகள் இந்த
ளவோடுதான் நின்று விடுகின்
ன.

ஓம் நமசிவாய பாங்க் கூட கடன்
காடுக்கிறது, கடன் வாங்குகிறது,
பரும்பாலான பாங்கிகளைப்
பால. ஆனால் அது பிறருக்குக்
டனைக் கொடுப்பதும், பிறர்
தனிடம் சேமித்து வைப்பதும்
ணத்தை அல்ல—மந்திரங்களை!
வேடிக்கை அல்ல—உண்மை!
பரீதமான உண்மை! காசியில்,
த்து ஆண்டுகளுக்கும் மேலாக,
லே ஜரூராகத்" தொழில்
த்தி வருகிறது இந்த பாங்க்!
ாம், சாதாரண பாங்கிகளில்,
ணத்தைச் சேமித்து வைப்போம்.
ந்தப் பாங்கியின் வாடிக்கைகாரர்
மந்திரங்களைச் சேமித்து
வக்கின்றனர். நம் பாங்கிகளில்
னைகப் பணம் பெறுவது வழக்
இவர்கள்—இந்த விபரீத மனி
ள் கடனைகப் பெறுவதுமந்திரங்
! பாங்கிக்கேற்ற வாடிக்கைக்
ர்கள்! வாடிக்கைக்காரர்களுக்
ற்ற பாங்கி!

வாடிக்கைக்காரர்கள், பாங்க்
சீவரிடம்" சென்று, (ரிசீவர்—
குபவர்—பணத்தை அல்ல—
திரத்தை), ஓம் நமசிவாயா
ற மந்திரத்தை எத்தனை முறை
ண்டுமோ அத்தனை முறை
க்கவேண்டும். ரிசீவர் அந்த
ரங்களை ஒழுங்காகவும் கணக்
தவறுமலும் எண்ணுவார்.
த்தை எண்ணுவது போலத்
) பாங்கிகுமாஸ்தா கணக்குப்
தகத்தில், வாடிக்கைக்காரர்
க்கில், இத்தனை மந்திரங்கள்
று சேர்க்கப்பட்டன என்று
ம் மாதி தேதியோடு குறிப்பிடு
நேரில் மந்திரங்களை
த்து சேமிக்க முடியாதவர்கள்

தாளில் 'மந்திரங்களை எழுதிக் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளப் படும்!

மந்திரங்களைக் கடனைகப் பெற விரும்புவோர் பாங்க் காஷ்யரிடம் சென்று (காஷ்யர்—பொருளாளர் பொருள், மந்திரம்) கேட்டால் கடன் தரப்படும் தேவையான அளவுக்கு. எத்தனை மந்திரங்கள் தேவையோ அத்தனை முறை ஓம் நமசிவாய மந்திரம் கடன் கேட்பவருக்காக என்று அவர் முன்னால் ஆண்டவனை நோக்கி உச்சரிக்கப் படும். உச்சரிக்கப்படும் என்பது கூடத் தவறு—கடனைக் கொடுக்கப்படும், அவர்கள் அகராதிப்படி!

இந்தப் பாங்கிக்கு, கணக்குப் பரிசோதகர்கள் உண்டு, டைரக்டர்கள் உண்டு, பங்குதாரர்கள் கூட்டம் உண்டு, ஆண்டறிக்கைகள் கூட (ஆடிடர் கை ஒப்பத்துடன்) வெளியிடப்படுவதுண்டு!

1936ல் வெளியான ஆண்டறிக்கையின்படி பாங்கியின் மந்திர கோஷா வில் (கஜானவில்) சேமித்து வைக்கப்பட்டுள்ள மந்திரங்களின் தொகை 382 கோடி! இதில் வாயால் உச்சரிக்கப்பட்டுச் சேர்ந்தவை 261 கோடி! தாளில் பொறிக்கப்பட்டவை 121 கோடி! பாங்கி துவக்கப்பட்ட முதல் ஆண்டின் கணக்கு இது—13-5-36ல் வெளியான "பாம்பே சமாசார் என்னும் பத்திரிகையில் பதிப்பிக்கப்பட்டிருப்பது! 1936 லேயே 382 கோடி மந்திரங்கள் என்றால் இன்று, 1948ல், 12 ஆண்டுகளுக்குப் பிறகு, எவ்வளவு மந்திரங்கள் அந்த பாங்கியின் கஜானவில் இருக்கும்! அய்யோடா! நினைத்துப் பார்க்கவே பயமாய் இருக்கிறதே!.........

* * *

இந்தியத் துணைக் கண்டமே! மதவெறி என்னும் மெல்ல மெல்லக் கொல்லும் நஞ்சுண்டு திகைக்கும் மக்கள் தொகுதியே! பழம் புகழ் பேசிப்பேசி பாதகரை வளர்க்கும் கூட்டமே! கோட்சேக்கள், அபாய அறிகுறி காட்டியும் கூட விழிப்புறுதிருக்கும் இந்திய மனித சமூகமே! உனக்கு மீட்சி இல்லையா?......

* * *

ஓம் நமசிவாயா பாங்க், காசியில்! இந்தியா, உலகில்! ஒட்டுமா இரண்டும்?

* * *

ஓம் நமசிவாயா பாங்க்! காசியில் மட்டுமல்ல, இந்தியாவின் ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு மாகாணத்திலும், ஒவ்வொரு கோட்டத்திலும் மாவட்டத்திலும், ஒவ்வொரு அக்கிரகாரத்திலும் இருக்கிறது. ஓம் நமசிவாயா பாங்க், இந்தியாவில் இருக்கிறது என்பதென்ன, இந்தியாவே ஒரு ஓம் நமசிவாயா பாங்க் ஆகத்தான் இருக்கிறது. வடக்கே காந்தியார் மீது பாய்ந்த துப்பாக்கிக் குண்டுகளும் தெற்கே ஆரியம் செய்துவரும் ஆர்ப்பாட்டமும் இந்த உண்மையைத் தவிரவேறு எதைக் காட்டுகின்றன?

ஓம் நமசிவாயா பாங்க்! மதப் பித்து! பழமை வெறி! வைதீக விஷம்! என்று தொலையும் இந்த வெறியாட்டம்? என்று தோன்றும் இந்தியாவில் புரட்சி?......

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இத்தனை மதங்களையும், மதகர்த்தாக்களையும் அந்தந்த மத வேதங்களையும் அவையெல்லாம் கடவுளால் சொல்லப்பட்டவை என்பதையும் அவ்வேதக்கதைகள் புராணங்கள் ஆகியவை உண்மை என்பவைகளையும்பற்றி அவநம்பிக்கை கொண்டவன் தான்.

ப-தி:- அப்படியானல் கடவுள் ஒருவர் உண்டு என்று மட்டும் கூறுகிற உன் கடவுள் நம்பிக்கையை யார்—எந்த ஆஸ்திகர் லட்சியம் செய்வார்? ஒரு குறிப்பிட்ட கடவுள், அல்லது ஒரு குறிப்பிட்ட மதகர்த்தர், அல்லது ஒரு குறிப்பிட்ட மதம் என்பவைகளை ஏற்றுக்கொள்ளாதவர் நம்பாதவர் எல்லோரும் மற்ற மதக்காரனுக்கு நாஸ்திகனே — நம்பிக்கையற்றவனே ஆவான்.

ஆ:ன்:- யாரோ எப்படியோ போகட்டும்—எனக்கென்ன? என் புத்திக்குச் சரி என்று பட்டதை செய்துவிட்டு செத்துப் போகிறேன்.

பு-தி:- ஏன் சாகிறீர். உயிருடன் தான் இருமே! உமக்கு சரி என்று படாததைத் தான் செய்யுமே! எனக்கென்ன கவலை? எப்படி இருந்தாலும் ஆஸ்திகர்கள் உம்மை வைது கொண்டுதானிருப்பார்கள் என்பதைத்தான் சொல்லவந்தேன். வேறென்றும் இல்லை. சரி போய் வாரும், பிறகு சந்திக்கலாம்.

போர்வாள்

20—3—48 சனிக்கிழமை

ஜல உஷா!

“இந்திய முதல் கொண்டு இந்தியரால் கட்டப்பட்ட முதல் இந்தியக் கப்பல்” ஜல உஷா, அதோ விசாகைத் துறையினின்று புறப்பட்டு விட்டது. விருதுகள் புடைசூழ, வீரர்கள் வாழ்த்த, விவேகிகள் போற்ற, வேத வேதியர்கள் மத கீதங்கள் “முழங்க,” முதல் அமைச்சர் நேரு முகமன் கூற, பக்தர்கள் அவர் பக்கம் நின்று தேங்காய் உடைத்து சூடம் கொளுத்தி பாராயணம் பல செய்து கப்பலை வணங்க, சிலர் விழிகளில் இன்ப நீர் ததும்ப, சிலர் சொற்களில் களிப்பு துள்ளிக் குதிக்க, சிலர் உள்ளத்தில் மகிழ்ச்சி அலை மோத, சிலர் உதடுகள் தோத்திரங்களை உச்சரிக்க, அந்நிலைக்கு ஆளான பலர் தம்மை மறந்து நிற்க, ஜல உஷா, ஆடி அசைந்து அலைகடல்மீது தன் நெடும் பயணத்தைத் தொடங்கி விட்டது.

விசாகையில் அன்றோர் திருநாள். சுதந்தர இந்தியாவில் முதல் சுதந்தரக் கப்பல் தன் பயணத்தைத் தொடங்கும் நாள் அல்லவா அது? ஆகவேதான் இன்பம், விசாகையில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் தவழ்ந்து விளையாடிற்று.

இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் பலமுறை முயன்று கடலிற் கலம் செலுத்த. ஆனால் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் அந்த முயற்சிகளையெல்லாம் முளையிலேயே கிள்ளி எறிந்து வந்தது. அடிமை இந்தியாவில் சுதந்தரக் கப்பல்கள் தோன்றுமானால் தன் சுகவாழ்வு உடனே சுருண்டு போய்விடும் என்பதை நன்கறிந்திருந்த வெள்ளைப் பரங்கியர் ஆட்சி கப்பல் தொழிலின் வாடையும் இந்தியத் துறைமுகங்களில் வீசா வண்ணம் பார்த்துக் கொண்டது. “கப்பல் ஓட்டுவேன்....என் உரிமையை நிலை நாட்டுவேன்” என்று புறப்பட்ட வீர சிதம்பரங்களையும் வெஞ்சிறையில் இட்டு வாட்டி வதைத்தது பிரிட்டானியம். இன்றோ அது தொலைந்தது—உரிமைக் கப்பல் பிறந்தது—அலைகடலைக் கிழித்தெறிந்த வண்ணம் அது கடலிடைப் பயணம் தொடங்கியது—மகிழ்ச்சி பிறந்தது.

ஜலம்! உஷா! ஜல உஷா! நீர் தேவதை! கடல் கன்னி! கடலிலே செல்லும் முதல் இந்தியக் கலம் அது—ஆகவே கடல் கன்னி என்றழைக்கப்பட்டாள். உஷா விடியற்காலத்தைக் குறிக்கும் ஓர் தேவதை. உஷா, காலை மலர்ச்சியின் உருவகம். காரிருள் தீர்ந்து, வெள்ளி முளைத்து, பொழுது புலரும் வேளை உஷா[...] காலம்! சுதந்தர இந்தியாவி[...] “கடலாடு காதை”யின் தொட[...]கம் இந்தக் கலத்தின் புறப்பாடு[...] அந்தக் கடற்கரை அத்தியாய[...]தின் ஆரம்பம் இந்தக் கலம்[...] இந்தியத் துணைக்கண்டம், கப்ப[...]லோட்டும் கலையை—முன்னொ[...] நாள் இங்கு சிறந்திருந்து பின்[...] வீழ்ந்துபட்ட கலைக்கலையை—ஜான்புல் தர்பார் காரணமா[...] மாசு படிந்து துருப்பிடித்து[...]போயிருந்த இப்பப் பழ[...] கலையை மீண்டும் புதுக்[...] தொடங்கி இருக்கிறது. இந்த[...] ‘தொடக்கம்’ ஒரு உஷாக் கால[...] இந்தியாவிற்கு! ஜல உஷா என[...] பெயர் இதைத்தான் குறிப்பி[...]கிறது.

சென்ற ஞாயிறன்று, ஜ[...] உஷா, தன் பயணத்தைத் தொ[...]டங்கியதைப் போலத்தா[...] ஆகஸ்டு 15 அன்று இந்திய[...] துணைக் கண்டமும் தன் ப[...]ணத்தைத் தொடங்கிற்று.

ஜல உஷா—அந்தக் கப்பல்—அன்று ஆடி அசைந்து புறப்ப[...]டது என்று சொன்னோம்; இ[...]திய அரசாங்கம் எனும் கப்பலு[...] அப்படித்தான் புறப்பட்ட[...] ஜல உஷாவிற்கு அன்று விழ[...] நாள். ஆகவே அது மெள்ள[...] சென்றது. தேவையானபோ[...] பயணம் உண்மையிலே[...] தொடங்கப்பட்டு விட்டபோ[...] அது விரைந்தோட முடியும்—அத்தகைய அமைப்பு அதற்[...] உண்டு. ஆனால், அரசாங்[...] கப்பல்......

அதுவும் விரைந்து செ[...] முடியுமா? இன்று வரை மு[...]வில்லை—அங்குலம் அங்கு[...]மாகக் கூட முன்னேற முடி[...]வில்லை—முன்னேற்றம் என்[...] இருந்த இடத்திலேயே நி[...]துத் தங்குகிறது—தங்குவதே இல்லை; பின் வாங்குகிறது

ஜல உஷா வேகமாகச் செ[...]லும் என்ற நம்பிக்கை நம[...]

ருப்பதற்குக் காரணம் அதன் மைப்பு முறை சிறந்தது என் மட்டுமல்ல, அது செல்லும் தைக் தேர்ந்த மாலுமிகள் ஞானக் கருவிகளின் துணை ணைடு தேர்ந் தெடுத்த வழி— ந்த மார்க்கம்! ஆகவே ங்கே புயல் வீசாது; திடீர்ப் றைகள் தட்டுப்படாது. சூறா த் திமிங்கிலங்கள் கலத்தைக் ழ்காது. பயணம் இடையே , கலம் கவிழ, தவறு நிகழ ம் இராது. கலம் கரை தும்—நிச்சயம். ஆனால் இந்தி கலம்......?

து பின் வாங்குகிறது. கலம் ழ்ந்திடுமோ என்ற அச்சம் க்கடி தோன்றுகிறது. புயல் ன்று சுழன்று வீசுகின்றது. நிற்கு ஆபத்து விநாடிக்கு டி அதிகரிக்கிறது. எங்கும் ல்—எங்கும் பரபரப்பு ன்றுகிறது. காரணம் அதன் மப்பு முறை சரியில்லை, முத அது செல்லும் பாதை , அடுத்தபடி!

ர்ந்து கவனித்தால், அந்த ங்கக் கலத்தின் அடியிலே டைகள் பல இருப்பது வு. இருப்பது என்பதை "பிறப்பது" என்று கூறு ப் பொருந்தும். ஏனெ புதுப்புது ஓட்டைகள் நம் முன்னே அடுத்தடுத்து றிய வண்ணமுள்ளன.

ணம், ஓட்டாத பல மூலப் ள்களைக் கொண்டு கலம் ப்பட்டிருப்பது தான்.

தியா ஒரு துணைக் கண் பல நாடுகளின் கூடாரம்; வறு இனங்களின் அடுக்கு

வேறு இனங்கள் என் மட்டுமல்ல—ஒன்றுக் று முரண்பட்ட இனங் ஒன்றை ஒன்று அழிக்க ம் இனங்கள்! ஒன்றுடன் சேர்ந்து வாழ முடியாத கள்!

கந்தகம், தீப்பொறி, இரண் டையும் ஓரிடத்தில் ஒன்று சேர்த்து, "இருவிரும் ஒருவரே! வாழிய நீவிர் வாழியவே" என்று பண் இசைத்தால் பயனில்லை. தீப்பொறி கந்தகத்தை விழுங்கி விடும். விழுங்கிவிடுவதோடு நில் லாமல், இரண்டிற்கும் இடையே ஏற்படுத்தப்பட்டுள்ள "கூடா நட்பு", இரண்டும் வைக் கப்பட்டுள்ள கட்டிடத்திற்கே கூட தீ மூட்டிவிடக் கூடும்.

இந்திய அரசாங்கம் பல கந்தக—தீப்பொறிகளின் இணைப்பு! ஆகவே அதில் வெடிப்பு பல காண்பது இயற்கை.

அந்த வெடிப்புகளில் மிக முக்கியமானது தென்னாடு-வட நாடு சிக்கல். மிக வேகமாக முத லாளித்துவ முகாம் அமைத்து வரும் வடநாடு சோஷலிசப் பாதையில் விரைந்து செல்லும் தென்னாட்டைப் போற்றாது; போற்ற முடியாது; போற்றும் என எதிர்பார்ப்பது பித்தர் செயலுக்குப் பொருந்துமே யன்றி விஞ்ஞான வழியே செல் லும் விவேகிகட்குப் பொருந் தாது. இந்த சிக்கல் தீர மார்க் கம், ஈரோட்டில் தயாரிக்கப் பட்டு, காஞ்சிபுரத்தில் மெருகு தீட்டப்பட்டுள்ள திராவிட நாட் டுப் பிரிவினை என்ற மோட்டாரில் ஏறி திராவிட சோஷலிசக் குடி அரசு காண்பது தவிர வேறில்லை.

அமைப்பு முறையின் தவறி னால் ஏற்பட்ட கோளாறு இது எனில் செல்லும் பாதையின் பிழையினால் கண்ட விளைவு காந்தியார் மறைவு போன்ற பல கொடுமைகள். முதலாளித்துவம், வகுப்புவாதம்—இந்த இரண்டு பிற்போக்குச் சக்திகளும் காட் டும் திசைவழியே செல்கிறது இந்தியக் கப்பல். ஆகவே அது வழி தவறுகிறது—பின் வாங்கு கிறது. சர் சண்முகங்களும் சியா மப் பிரசாத்களும் கலத்தைச் செலுத்தும் மாலுமிகள் எனில், கலம் பின் வாங்காது வேறென்ன செய்யும்?

"ஜல உஷா" அதோ செல் கிறது ஆனந்தமாக. ஆனால் அதன் அருகே இந்திய அரசாங் கம் என்னும் கப்பல் தள்ளாடித் தடமாடி அசைந்து கொடுக் கிறது-பின் புறமாக!

இந்த நிலை நம் உள்ளத்தை உருக்குகிறது. "கண்ணீர் விட்டே வளர்த்தோம் சர்வேசா, கருகத் திருவுளமோ" என்ற பாரதி பாடலை, வாய் முணு முணுக்கிறது. சுதந்தரக் கப்பலை சூறுவளி மோதுமோ, கடலில் கலம் கவிழுமோ, ஓட்டைகள் பெருகிட வேதனை பெருகுமோ என்ற அச்சம் நம்மைப் பிடித் துக் குலுக்குகிறது. வாட்டம் நம்மை வாட்டுகிறது.

இந்த வாட்டம் தீர்ந்து, துக் கம் தொலைந்து, கலம் நேர் வழி செல்ல, அது கண்டு நாம் களிக்க, களிப்பு எங்கும் பரவ மார்க்கங்கள் இரண்டுதான் உண்டு.

ஒன்று—கலத்தின் அமைப்பு முறை மாறவேண்டும். மாற்றங் களில் மிக முக்கியமானது திரா விடநாட்டுப் பிரிவினை.

இரண்டு—கலத்தின் பாதை மாறவேண்டும். மதவாத வகுப்பு வாத முதலாளித்வ படுகுழிப் பாதையிலிருந்து விலகி, கலம், புரட்சிப் பாதையில் புதுக்கொடி ஏந்திச் செல்லவேண்டும்.

செல்லுமா?

புது வாழ்வு பிறக்குமா?

யாரைக் கேட்பது? யாரைக் கேட்டால் பதில் சொல்லப் போகிறார்கள்?......

வருங் காலமே! நீயேனும் பதில் கூற மாட்டாயா? இல்லை —எங்கள் நாட்டு தேசிய வாதி கள் போல நீயும் மௌன விர தம் பூண்டுவிட எண்ணு கிறாயா—?

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வுலக இச்சை! உண்மையை—இன்றைய நிலைமையை—கூறுவதற்காக என் மேல் கோபிக்காதே! என் தோள்களைக் கண்டு, மயங்கி, ஆசையால் துவண்டாய்! என் தாளைப் பிடித்துக்கொண்டு காதல் காதலென்று கெஞ்சினாய்!........"

"போதும்! போதும்!" என்று தன் கையால், பேசும் அவன் வாயை மூடினாள், சிரித்துக்கொண்டே மனோரமா.

குளிர்ந்த மொழியாள், குதித்தோடத் தொடங்கினாள். மடியிலிருந்தவள் தன் பிடியையும் மீறியோடிவிடவே, அவளைத் தேடிக் கொண்டு, மாடிக்குச் சென்றான்.

மாடியில், மனோரமா, மலையமாருதம் இராகத்தில் பண்ணிசைத்தாள்! இசைத் தென்றல் அறைமுழுவதும் உலவியது. இசையின் 'பாவப் பொழிவில்' மெய்மறந்து, தன் இனத் தொண்டையும் மறந்து, அவள் மடியில் சாய்ந்தான்.

வீட்டின் கதவை யாரோ பலமாகத் தட்டுவதைக் கேட்ட அவன், எழுந்து, மாடியிலிருந்தபடியே கீழே எட்டிப் பார்த்தான். சுமார் பத்து பேர் வீட்டின் முன்பு நின்றிருப்பதைக் கண்டு, சிவனிடம் செய்தியைக் கூறினான்.

சாத்தித் தாளிடப்பட்டிருந்த, மாடியின் கதவைத் திறந்து கொண்டு, வேகமாக இருவரும் கீழே வந்தார்கள்.

சிவன் தெருக் கதவைத் திறந்தான். கண்ணனின் முகத்தில் குறும்புப் புன்னகை தோன்றியது.

"சிவா, நேரமாகிறது புறப்படு!"

"கண்ணா! அச்சாகி விட்டதா?"

"எல்லாம் ஆகி விட்டது! உன்னால் தான் நேரமாகிறது, புறப்படு!"

சிவன் திரும்பி மனோரமாவைப் பார்த்து, "போய் வரட்டுமா?" என்று கேட்டான்.

சரியென்று அவள் வாய் கூறியது. கண்கள் "விரைவாக வந்து விடுங்கள்" என்று கட்டளையிட்டன!

(தொடரும்)

அட்டைப் படம்

நம் ஓவியர் கணேசன் போர்வாள் நிலையத்திற்கு வந்தார். "சேதி தெரியுமோ? மாகாண காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் ஒருவரையும் தாலுகா கா. க. உறுப்பினர் ஒருவரையும் காங்கிரஸ் சர்க்காரே சிறைப்படுத்திவிட்டனராம்! இதோ பாரும் ஹிந்து தினசரியை!" என்றோம். அப்படியா என்றார்; சட்டைப் பையிலிருந்து மைப்புட்டி ஒன்று எடுத்தார்; ஏதோ அப்படியும் இப்படியும் கிறுக்கினார். இந்தப் படத்தை நம்மிடம் நீட்டினார்! ஓவியர் குறும்பைப் பாருங்கள்! சிறைவாசம், தொண்டுக்கேற்ற பரிசாம்! தேசியவாதிகள் முன் நாள் ஆற்றிய தொண்டிற்கு தேசிய சர்க்காரே தரும் பரிசு சிறையாம்! குறும்புக்குத்தான் எழுதினார் ஓவியர். ஆனால் அது உண்மையாகத்தானே இருக்கிறது.

சிக்கலில்!

21—3—48 ஞாயிறு மாலை 6-மணிக்கு

திராவிடர் பொதுக்கூட்டம்

பெரியார் வருகிறார்.

மா. இளஞ்செழியன், மற்று பலர் பேசுவர்.

அறிஞர் அண்ணாதுரை

[பதிப்பு: திராவிடப் பாச றை, சென்னை. விற்பனை உரிமை: பாரி நிலையம், 59. பிராட்வே, சென்னை. விலை 1-8-0.]

அண்ணா, திராவிடத் திருநா இளைஞர்களின் இருதய கீத அந்த கீதம் தத்தம் உள்ளத் எழுப்பிய இன்ப நாதத்தை பத்து நால்வர்—அரசியல் தலை கள், மொழிப் புலவர்கள், கவி கலைஞர்கள், இதழாசிரியர் இன்ன பிறர்—இந் நூலில் எ துருவில் வடித்துள்ளனர். பா யார், என். எஸ். கே, ஔவை துரைசாமி, டி. எஸ். வேலன் இவர்கள் கருத்துரைகள் நன்று. தொகுப்பு முறையும் சிட்ட வகையும் அழகாய் உள்ள பயன்மிக்க நூல். அண்ணா பற்றிப் "பிரசங்கம்" செய்ய இரண்டொரு மணிவாசகத் தமி களும் காமாலைக் கண்ணர்க "அதிகப் பிரசங்கம்" செய்கி னர் என்பது தவிர இந் நூ குறைபாடு ஏதும் இல்லை. த உலகம் இந் நூலை இருகையா வரவேற்கத் தவறாது.

ஜெயராம்
காயசுத்தி லேகியம்
வயிற்றுக் கோளாறுகளுக்கு அற்புத சஞ்சீவி
4 வேளையில் குணம் தெரியும்.
1 சேர் ரூ 4/— வி. பி. பி. வேறு
G. ஜெயராம் வைத்தியசாலை
கும்பகோணம்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

ஆ-ன்:- முகம்மது நபி என்பவ
ல் சொல்லப்பட்ட கொள்கை
உடையது.

ப-தி:- அதற்கு என்ன
ரம்?

ஆ-ன்:- குரான் என்னும் வாக்
ம்.

ப-தி:- அது யாரால் சொல்லப்
டது?

ஆ-ன்:- கடவுளால் மகமது நபி
ர்கள் மூலம் வெளியாக்கப்
டது.

ப-தி:-அப்படி என்று யார்
ன்னார்?

ஆ-ன்:- நபி அவர்கள் சொன்

ப-தி:- அப்படி என்று யார்
ன்னார்?

ஆ-ன்:- குரான் வாக்கியங்களில்
க்கிறதுடன், வேறு பல சாக்ஷி
களுமிருக்கின்றன.

ப-தி:- வேறுபல சாக்ஷியங்கள்
பது எவை.

ஆ-ன்:- அந்தக்காலத்தில் நபி
ர்களுடன் இருந்த பல பெரிய
ள் வாக்கு இருக்கிறது.

ப-தி:- அவை உண்மை என்ப
ஆதாரம் என்ன?

ஆ-ன்:- அந்தப்படி இருக்கும்
ரங்களை நம்பவேண்டியது

பொது

ப-தி:- மற்ற மதங்களும் இது
ல் தானே?

ஆ-ன்:-ஆம். எல்லாம் இப்படிப்
ததான்.

ப-தி:-அப்படியிருக்க இவ்வளவு
களையும் ஒரே கடவுள் உண்
இருப்பார் என்று நீர்
கிறீரா?

ன்றுக்கொன்று மாறு
தும் முரண்பட்டதுமான
ள் வாக்குகள், கடவுளால்
பப்பட்டவர்கள், கடவுள்
ரங்கள் என்பவர்கள், அவர்
வாக்குகள், சம்பந்தப்பட்ட
ளின் தத்துவங்கள், பலவித
தன்மை பெற்றவர்கள்
எல்லோரையும், ஒரே, கட
சொன்னார், சிருஷ்டித்தார்
து நியாயமாகுமா?

னல்தான், இவைகள், ஒவ்
சீர்திருத்தக்காரர்களால்,
ளிகளால், முன்பின் ஆராய்
ர்த்து மனித சமூகத்துக்கு
செய்யவேண்டும் என்ற கவலை கொண்டவர்களால் (மனிதர்களால்) உண்டாக்கப்பட்டது என்று எண்ண வேண்டியிருக்கிறது. அப்படிக்கில்லாமல் ஒரே கடவுள் இருந்து அவரே இவ்வளவு மதங்களுக்கும், மதகர்த்தர்களுக்கும் ஆதார புருஷர் என்றால் அப்போது கடவுளின் மேன்மைக் குணம் பாதிக்கப்படவில்லையா? யாரோ சில மனிதர்களுக்கு மேன்மை கொடுப்பதற்காகக் கடவுளை முட்டாளாக்குவதும் பல கடவுள்களைச் சிருஷ்டிப்பதும் பல வேதங்களை சிருஷ்டிப்பதும் சரியா?

ஆதலால் இம் மாதிரி மதம் என்பது வியாபாரம்; மத கர்த்தர்கள், வேதம், புராணம் என்பவைகள் வியாபாரச் சரக்குகள் என்பது பகுத்தறிவுக்காரர்களுக்குப் படும் விஷயம். இதுஒரு சமயம் தப்பாக இருந்தாலும் இருக்கலாம்.

நாம் இருவரும் இவ்விஷயங்களில் ஒரே கருத்துடையவர்களாகி இவைகள் எல்லாம் சற்று நேரத்துக்கு உண்மை என்றே ஒப்புக்கொள்வோம். அதாவது, இந்து மதம் கடவுளால் உண்டாக்கப்பட்டது என்பதையும், வேதம் கடவுள் வாக்கு என்பதையும், கிறிஸ்து கடவுள் அவதாரம் என்பதையும், முகம்மதுநபி கடவுளால் அனுப்பப்பட்டவர் என்பதையும், குரானையும் மற்ற மதத்தையும் ஒப்புக்கொள்வோம். ஆனால் அவைகள் எல்லாம் இன்று ஒன்றாய் இல்லாமல்,வெவ்வேறு அபிப்பிராயங்களாகவும், சில முரணானவைகளாகவும், சில, ஒரு மதத்துக்கும், மற்ற மதங்களுக்கும், ஒரு மத தத்துவத்துக்கும், மற்ற மத தத்துவங்களுக்கும், ஒரு மதத் தலைவருக்கும் மற்ற மதத் தலைவர்களுக்கும் மாறாகவும் இருப்பானேன்?

ஆ-ன்:- இதுவும் சிரமமான பிரச்சினையாகத்தான் இருக்கிறது. பெரியவர்களைக் கேட்கவேண்டும்.

ப-தி:- சாவகாசமாய் பெரியவர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். ஆனால் இன்று நாம் எதை நம்பி எப்படி நடந்துகொள்வது?

ஆ-ன்:- இவைகள் எல்லாம் உண்மை என்றோ, அல்லது உண்மை அல்ல என்றோ எப்படியோ இருக்கட்டும். அதற்காக நாம் கவலைப்பட வேண்டாம். உலகில் மனிதன் உயிருள்ளவரை நல்லதை எண்ணி, நல்லதைச் செய்யவேண்டும்—அவ்வளவுதான்.

ப-தி:- நல்லது எது? தீயது எது என்பதற்கு அளவு கருவி என்ன?

ஆ-ன்:- இது மிகவும் கஷ்டமான பிரச்சினையாகத்தான் இருக்கிறது. ஆனாலும் பெரியவர்கள் நடந்து காட்டியது, சொல்லி இருப்பது இவைகளைக் கண்டு தெரிந்து கொள்ள வேண்டியதுதான்.

ப-தி:- பெரியவர் யார் என்பதற்கு அளவு கருவி என்ன? ஒருவர், ஒருவரைப் பெரியவர் என்றால் மற்றொருவர் அவரை ஒப்புக்கொள்வதில்லை. அவருக்கு மாறாக அல்லது வேறொன்றைச் சொன்னவரைப்பெரியவர் என்கிறான். இதற்கு ஒரு பரீக்ஷை குறிப்பு வேண்டுமே?

ஆ-ன்:- இதுவும் கடினமான பிரச்சினையாகத்தான் இருக்கிறது. இதற்கெல்லாம் உம்முடைய சமாதானம்தான் என்ன? சொல்லும் பார்ப்போம்.

ப-தி:- என் சமாதானம் என்ன? நான்தான் மதத்துவேஷி, பார்ப்பனத் துவேஷி, நாஸ்திகன், சுயமரியாதைக்காரன் என்றெல்லாம் பெயர் வாங்கினவனாய் விட்டேனே, என் பேச்சை யார் கேட்பார்கள். நீர் ஆஸ்திகராயிற்றே—உமக்குத்தெரியுமென்றும்,தெரியாவிட்டாலும் உம்முடைய உள்ளத்தில் சதா குடிகொண்டிருக்கிற கடவுள் உணர்த்துவார் என்றும் கருதி உண்மையான சந்தேகத்தை நிவர்த்திசெய்து கொள்ளுவதற்காகக் கேட்டேன். நல்ல வேளையாக நீர் பதில் சொல்லாவிட்டாலும் என்னை வையாமல் பெரியவர்களைக் கேட்டுச் சொல்லுகிறேன் என்று சொன்னீரே அதுவே எனக்கு ரொம்ப திருப்தி. ஆஸ்திகர்களில் இப்படிப்பட்டவர்கள் அருமை, மிக அருமை. சந்தேகம் கேட்டால் அடி, உதை, நாஸ்திகன், பிராமணத் துவேஷி, ஆரிய துவேஷி..............என்றெல்லாம் வெறிபிடித்தவர்கள் போல் ஆடுவார்கள். ஆதலால் உம்மை பற்றிக் கூட எனக்கு சந்தேகம்தான்.

ஆ-ன்:- என்ன சந்தேகம்?

ப-தி:- நீர் ஆஸ்திகரோ என்னமோ என்று.

ஆ-ன்:- நான் உண்மையில் ஆஸ்திகன். அதாவது ஒரு கடவுள் இருப்பார் என்று நம்புகிறவன்.

(5-ம் பக்கம் பார்க்க)

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

"உழைக்கின்றேன் என்று சொல்லிக்கொண்டே ஊராரின் சொத்தைத் தின்பவர்களிவர்கள்! ஏழைகளின் இரத்தத்தை முதலாளி வெளிப்படையாக உறிஞ்சுகிறான். இவர்கள் ஏழைகளுக்காகப் பாடுபடுவதாகக் கூறிக்கொண்டு, இரக்கமின்றி இவர்களும் ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சுகிறார்கள்!"

"உண்மையாகவா?"

"ஆமோடாரா!" என்று அந்தத் தியாகிகளிலொருவர் கூறினார்.

குமார் திரும்பி, கீழே யிருந்தவர்களை நோக்கினான். ஒவ்வொருவர் கையிலேயும் ஓர் கண்ணாடிப் பாத்திரமிருந்தது. பாத்திரத்தில் சிகப்பாக ஏதோ இருந்தது. அவர்கள் பாத்திரத்திலிருந்ததை ஒரு சிறிய குழாயின் வழியாக உறிஞ்சிக் குடித்துக்கொண்டிருந்தார்கள்!

"பாத்திரத்தி லிருப்பதென்ன?"

"ஏழைகளின் இரத்தம்! பொது நலம் புரிவதாகக் கூறிக்கொண்டு ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சும் மிருகங்களிவர்கள்!"

குமாருக்கு கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. ஏழைகளின் இரத்தத்தைக் குடித்துக்கொண்டிருந்தவர்களின் முகங்களிலே காரித் துப்பினான்.

மேடையிலே நின்றிருந்தவர்களைப் பார்த்து, "தியாகிகளே, உங்களுக்கு என் வணக்கம்!" என்று தன் தலை தாழ்த்தி வணக்கம் தெரிவித்தான்! மின்னல்! இடி! மேடையிலிருந்தவர்கள் மாயமாய் மறைந்தார்கள்! ஆனால் தரையில் நின்று கொண்டிருந்த போலித் தொண்டர்கள் மட்டும் அப்படியே யிருந்தனர்.

"சீ, நீங்களேன் இங்கு நிற்கிறீர்! ஓடிப்போங்கள்! மறைந்து போங்கள்!........."

"ஓடிப்போங்கள், மறைந்து போங்கள்" என்று குமார் கத்தியதைக் கேட்ட அவன் அத்தை அவனை வந்து எழுப்பினாள்!

"குமார்! என்னடா பகலிலேயே கனவு கண்டு அலறுகிறாயே!" என்றாள் அவன் அத்தை.

குமார் விழித்துப் பார்த்தான். கண்டது கனவுதான். என்றாலும் புரட்சிக் கவிஞரின் கவிதைகளிலே பொருள் புதைந்திருப்பது போல, கனவிலும் உண்மை புதைந்திருப்பதை உணர்ந்தான்!

3. கை பற்றினான்

சோலையூர் பெயருக்கேற்ற வண்ணம் செழுமையும் வளமையும் பொருந்திய எழில் மிக்க சிற்றூர். கண்ணுக் கெட்டிய வரைக்கும்பச்சைப்பசேலென்று செழிப்போடு வளர்ந்திருந்த நெல் வயல்களும், அடர்ந்த தென்னந் தோப்புகளும், மாந்தோப்புகளும், முந்திரி மரங்களால் மனோரம்மியமாகக் காட்சி அளித்தன.

அந்த ஊரில் பழமையான குடும்பமொன்றில் பிறந்தவன் சிவன். பழமையான பணக்காரக் குடும்பத்தில் சிவன் பிறந்திருந்தாலும், புதுமையான, புரட்சிகரமான கொள்கைகளைக் கொண்டவன். காளைப் பருவம். கடுகளவும் களங்க மற்றவன். தனக்குச் சரியென்று பட்டதை எவ்வளவுதான் எதிர்ப்பேற் பட்டாலும் செய்தே முடிப்பான்.

அவன் மனோரமாவை உயிரினும் மேலாக நேசித்தான். மனோரமா மாநிற மேனியாள், மல அழகிய முகத்தாள்! இடையாள்! கொஞ்சும் யாள்! இளமையும் க அமைந்த எழில் உடல ஆனால் ஒரே ஒரு குறை அ டம்! அவளோர் ஆரியப்பெ

சிவனின் வீட்டுத் தே மும், மனோரமாவின் வீ தோட்டமும் ஒன்றாகவிருந் மனோரமா கிணற்றில் நீரெ அடிக்கடித் தோட்டத் வருவாள்—சிவனும் வருவ அவளது அழகை தினந்தே பார்த்துப் பார்த்து ரசித் தான். அவன் கடைசி வ ரும் ரசிகமணியாகவேயி விடவில்லை! நாளாக ந இருவரது கண்களும், கல முதலில் மிரண்டன, பேசின! அவர்கள் உ களில் ஆசை வளர்ந்தது. காரியின் பேரெழிலில் சி பறிகொடுத்தான்; காத திறந்திருந்த மனோரம உள்ளத்தில் சிவன் புகுந் டான். வேற்றினப் பெ யிற்றே என்று அவன் உ எவ்வளவோ தடுத்துப் நது பயனில்லை!

சேற்றில் முளைப்பதால் தாமரையைப் பறிக்காமல் விடுகிறார்கள்? முள் செ மலர்வதால் ரோஜாவை வி தவர்களுண்டா? அத பாம்பிருக்கும், பாம்பி தில் விஷமிருக்கும், தீண் உடலில் உயிர் நிலைக்காத வளவும் தெரிந்திருந்தும் பூவைப் பறித்துப் பயன் தாமலா விட்டு விடுகிறார் இப்படியெல்லாம் அவன் கடி கேள்விப்பட்ட உ களை எண்ணி யெண் உள்ளத்திற்குச் சமா கூறினான்!......கன்னி பற்றினான்!

உயர்ந்த ஜாதி நான், அடுக் இது! முறையல்ல! தகாது! பாதகம்! நீ நான், டாதே! கையை விடு'' று அவள் கூற வில்லை. உள் ில் குடிபுகுந்தவன், உட தொட்டால் மறுப்பாளா? பற்றினான், களிப்போடு ஒப் ள்!

ரு நாள் அணைப்பினால் அவ ஆசை தீர்ந்து விடவில்லை. கிட்டாத இன்பமான ளே, தன் மனைவியாக ண்டுமென்று, ஆசைப்பட் , தீர்மானித்தும் விட் .

வன் தோழன் கண்ணன் வனவோ தடுத்துப் பார்த் . பயனில்லை. கடைசி தோல்வியடையவே, சிவ குத் தைரியம் கூறம் கைங் ்த்தில் இறங்கினான் கண் .

சிவா! மனோரமாவும் நம் ய்தான்!''

எப்படிக் கண்ணா?''

படிப்பிற்காக வெளியூரி ய இருந்துவிட்டதால், உள் செய்திகள் உனக்கு அவ் வாகத் தெரியாது. கோட் வரய்யர் கோயில் புரோகிதர் துதான் உனக்குத் தெரி !''

ஆமாம் தெரியும்!......''

ர்மூர்...........'' கண்ணன், ின் காதில் மெதுவாக ரகசியமாகச் சிறிது நேரம் ன். செய்தியைக் கேட்கக் சிவனின் முகம் மலர்ந்து ண்டே வந்தது.

இதுதானா மனோரமாவின் று?'' என்று கூறிச் சிரித் சிவன்.

ஆமாம்!'' என்று கூறி கண் சிவனின் முதுகில் தட் காடுத்தான்.

அழகியின் வரலாற்றை அறிந்த பின்னர், எப்படியாவது அவளை மணந்து தானாக வேண்டுமென்ற அவனது முடிவு இன்னும் பலப்பட்டது. சிவனுக்குத் தந்தையில்லை, தாய் இருந்தாள். ''வேண்டாம்—குலத்திற்கடுக்காது!'' என்று தடுத்துப் பார்த்தாள். முடிய வில்லை!

கோட்டீஸ்வரய்யர், ஊரி லில்லா நேரத்தில்—இருந்திருந் தாலும் தடுத்திருக்க முடியாது—மனோரமாவிற்கும் சிவனுக்கும் சீர்திருத்தத் திருமணம் நடந் தேறியது.

ஊரிலிருந்து வந்த கோட்டீஸ் வரய்யர், ''ஜாதி போயிற்று, ஆச்சார அனுஷ்டானங்கள் போயிற்று, மதம் போயிற்று!'' என்று, மானம் போயிற்று என் பதைத் தவிர, மற்றதெல்லாம் போயிற்று என்று கத்தினார்! கோபித்தார்! சபித்தார்! எப் படியாவது சிவனை வஞ்சம் தீர்த் துக்கொள்வதாகச் சபதம் செய் தார்! பணம் படைத்த சிவனை, பெயர்மட்டும் கோட்டீஸ்வரன் என்று வைத்துக்கொண்ட அய் யரால் என்ன செய்ய முடியும்? ''செய்கிறேன் பார்!'' என்று சினந்து கர்ஜித்தார் அய்யர். பெற்று வளர்த்த பெண், தன் சம்மதமின்றிப் பறந்தாள் என் றால் வயிறு எரியாதா? ஆகவே அவர் கோபித்துத் திட்டியதில் தவறில்லை!

சேலையூரில் சுயமரியாதைத் தென்றல் அதிகமாக வீசத் தொடங்கியது. தென்றல் அய்ய ரின் உள்ளத்தை நோகச் செய் தது. நோயாளியினால், தென்ற லின் குளிர்மையையும் இனிமை யையும் உணர்ந்து, அனுபவிக்க முடியுமா?

மலர்த் தோட்டத்திலுள்ள முட் செடிகளை வெட்டி வெளியே வீசி விட்டு, கற்களை யும் குப்பையையும் அப்புறப் படுத்தினால், பாம்பும் தேளும் பதுங்கிவாழ இடமின்றி வெளியே கிளம்பிப் போய்விடுவ தைப் போல, ஊரும், காலமும், கெட்டுவிட்டதென்று கூறி, கோட்டீஸ்வரய்யர் சேலை யூரை விட்டுப் பழத்தூருக்குக் குடியேறினார்! கோயில் புரோ கிதராக காலம் தள்ளிவந்த அய்யர், 'காலம் கெட்டுவிட்ட தால்' ஜமீன்தார் ஜம்புலிங்கம் பிள்ளையிடம் கணக்கெழுதும் வேலையில் அமர்ந்தார்.

* * *

மனோரமா தன் மடியில் சாய்ந் திருக்க, உள்ளத்தில் உவகை ஊற்று கொப்பளிக்க, இன்பமா கப் பேசிக்கொண் டிருந்தான் சிவன்.

''கண்ணே! நம் மணத்திற்கு எவ்வளவு எதிர்ப்பிருந்தது! மனோரமா, மலையவ்வளவு எதிர்ப்பிருந்தும், எள்ளளவும உறுதி குறையாமல் நம் உள்ளத் திற்கு உரம் தந்தது எது?''

''கடவுள்தான் கண்ணாளா!''

''சீ! உன் ஜாதி புத்தி போக வில்லையே! ஊரை ஏய்க்க உன் தாய்க்கு அப்பன், அவன் அப் பன், இப்படி உன் முன்னோர் கள் ஏற்படுத்தினர் கடவு ளென்ற ஒன்றை!''

''அவர்கள் ஊரை ஏய்த்தால், தாங்கள், அவர்களை யெல்லாம் ஏய்த்தல்லவா என்னைக் கவர்ந் தீர்!''

''நானா ஏய்த்தேன்! ஆரி யச் சேரியில் உன் அழகை அனுபவிக்க ஆள் இல்லை; மலர்ந்த மலரில் தேன்மொண்டு குடிக்க வண்டு இல்லை அங்கு! அங்குள்ள ஆண்களுக்குப் பணம், பரலோகம் இவற்றில் தான பற்று. பெண்களுக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

தொடர் கதை

2. மறைந்து போங்கள்!

[முன்பு: குமார் கனவு காண்கிறான். கனவில், மின்னல்! இடி! தன் எதிரில் ஏராளமான தோழர்கள் நிற்கக் கண்டு, நீங்கள் யார் என்று கேட்கிறான். தேசத்திற்கு உழைப்பவர்கள் என்று பதில் வருகிறது. உரக்கச் சிரிக்கிறான்— உண்மை உழைப்பாளிகளா என்று கேட்கிறான். மறுபடியும் மின்னல் இடி! இம்முறை ஒரு சிலர் மட்டுமே ஒரு மேடைமீது காணப்படுகின்றனர். அவர்களுடைய உடலிலிருந்து இரத்தம் பீறிட்டுக்கொண்டு வெளியே வருகிறது. சதைகள் அறுந்து விழுகின்றன. இந்தக் கோரக் காட்சியைக் காண்கிறான் குமார். பிறகு...]

பயத்தாலும், வியப்பாலும் அவன் கண்கள் விரிவதும் மூடுவதுமாய் இருந்தன! மேடையினருகே சென்றான்.

மேடையின் மேலே நின்றுகொண்டிருந்தவர்களின் முகங்கள் மட்டும் அப்படியேயிருந்தன. அவர்கள் கழுத்திலிருந்து கால்கள் வரைக்கும் சிறிது கூட தசையே கிடையாது! வெறும் எலும்புக் கூடுகள்! மேடை முழுவதும், தசையும் நரம்பும் கும்பல் கும்பலாய் நிரப்பியிருந்தன! இரத்தம் ஆறு போல் கீழே ஓடிக்கொண்டிருந்தது!

அந்த உருவங்கள் குமாரைப் பார்த்துச் சிரித்தன!

"நீங்கள் தியாகிகள்! வீரர்கள்! ஏன் இப்படி கோரமாகி விட்டீர்கள்?"

"குமார்! நாங்கள் உண்மையாக உழைப்பவர்கள்! நாட்டிற்காக இரத்தம் சிந்துபவர்கள்! உடல் இளைக்க இளைக்கத் தொண்டாற்றுபவர்கள்! போர் முனையில் நிற்கும் போர் வீரர்கள் நாங்கள். இறுதி வரைக்கும் போரிடுவதென்ற உறுதி பெற்று, உரிமைக்காக முழக்கமிடுபவர்கள் நாங்கள்! ஆடையில் அழுக்குப்படியாமலும், அழகாக அரசியலைப் பேசியும், மக்கள் உள்ளத்திலே மகிழ்ச்சியைக் கிளப்பி, கரகோஷத்தைக் கேட்டுக் களிப்பெய்தி வீடுசெல்லும் அரசியல் வாதிகள் அல்ல நாங்கள்! செயலிலே தான் எங்கள் நாட்டமிருக்கும்!...இதோ நிற்கிறாரே வெண்தாடிக் கிழவர்—உனக்குத்தான் இவரைப் பத்தித் தெரியுமே! இவருடைய

தியாகமும், தீரமும்,
தெளிவும், சீர்திருத்த
நீ அறிந்தவைதானே! இ
ருக்கு அருகில், எனக்
பக்கம், நிற்கிறாரே
குள்ளமான உருவுடன்
தென்றலும் போன்ற
பேச்சு! செயலோ புய
மலையும் போன்றது!
போல எங்களிலே மி
தான் பேசுவார்கள்!
செயல், செயல், புரட்
புரட்சி! இது தான் எ
ளத்தின் நாதம்!........

"இந்தக் கோரக் க
கருத்தென்ன?"

"கலைஞரே! உமக்
வில்லையா?" எனக் க
தார்கள்.

"இல்லை!"—இப்ப
யதும் அவன் உடல் சி

"இனியும் நாங்கள்
கப் போகிறவர்கள்,
மேலும் உழைக்கப்
கள், எங்கள் உடலில்
இரத்தமும் இருக்கு
கும உழைக்கப் போ
இதுதான் இந்தக்
கருத்து."

"உங்களில் பலரை
எனக்குப் புதியதாக இ
சிலரைத் தவிர, மற்றவ
ரும் எனக்குத்
லையே!"

"நாங்கள் தொ
உண்மைத் தொண்ட
கள் பெயரை நாங்க
ரப்படுத்திக்கொள்வதி
ணம் எங்களுக்கு ஆ
நேரமுமில்லை!"

"இதோ, ஒரு கும
றார்களே, அரசியலி
னின் தகுதியென்ன?

(10-ம் பக்கம்

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Man
at Free Printers 147, Coral Merchant St., Madras. JointEditor, M. Ilancheliyan B